# இரட்டைக்கிளவி

பொருளற்ற ஒரே சொல் இருமுறை அடுக்கி வருவதே இரட்டைக்கிளவி ஆகும். இரட்டைக்கிளவி தனித்தனியே பிரித்தால் பொருள் தராது.

**சான்று** :-

மரங்கள் **கிடுகிடுவென** வளர்ந்தன.
பாத்திரங்கள் **கடகடவென** உருண்டது.
காற்று **சிலுசிலுவென** வீசியது.
தங்கம் **பளபளவென** மின்னியது.
சிங்கம் **சிடுசிடுவென** கர்ச்சித்தது.
விறகு **மடமடவென** எரிந்தது.
குழந்தைகள் **துருதுருவென** விளையாடினர்.
குடும்பத்தினர் **கலகலப்பாக** பேசினர்.
வைரம் **தகதகவென** மின்னியது.
போட்டிகள் **விறுவிறுப்பாக** நடந்தன.
காற்றில் இலைகள் **சலசலவென** ஆடியது.
வாகனத்தை **தரதரவென** இழுத்தான்.
முரசை **டமடமவென** தட்டினான்.
செல்வன் **வளவளவென** பேசினான்.
செல்வி **கலகலவென** சிரித்தாள்.
ஆற்றுநீர் **சலசலவென** ஓடியது.
அப்பளம் **படபடவென** பொரிந்தது.
பாடத்தை **மடமடவென** படித்தாள்.
நெருப்பு **தகதகவென** எரிந்தது.

www.kids.noolagam.com